தேவைகளுக்குப் போக உபரியாக இருக்கிறது. அதேபோன்ற திட்டங்களை தமிழகத்திலுள்ள அனைத்துச் சர்க்கரை ஆலைகளிலும் விரிவாக்கம் செய்திட அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இப்போது 183 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வருகின்ற பிப்ரவரி 2013 ஆம் ஆண்டு துவங்கப்படும் என்று சொல்லப்படுகின்றது. உடனடியாக நடவடிக்கை எடுத்து மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அதனால் பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

பேருந்து வசதி

***1935—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து சென்னைக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து சென்னைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, புதிய பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2012 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலிருந்து சென்னைக்குப் போக்குவரத்து வசதி வேண்டுமென்று வினா எழுப்பியவுடனேயே, அதை நான் இந்த அவையில் எழுந்து கேட்பதற்கு முன்பாகவே பஸ்களை இயக்குவதற்கு வாய்ப்பளித்த தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம் போக்குவரத்துக் கழகத்திற்குப் பொற்காலம் நடந்து கொண்டிருக்கின்றது. எப்பொழுதெல்லாம் மைனாரிட்டி தி.மு.க. அரசு ஆட்சிக்கு வருகிறதோ, அப்பொழுதெல்லாம் போக்குவரத்துக் கழகம் கடும் நஷ்டத்தில் இறங்கி சினிமாவில் வருவதைப்போல, ஆங்காங்கு பஸ்கள் ஓட்டை உடைசலாக நிற்கின்றபோது, பேரீச்சம்பழம் விற்பவர்களெல்லாம் அந்தப் பகுதியில் வந்து நின்றுகொண்டு, "ஓட்டை ஒடிசல் ஈயம் பித்தளைக்கு பேரீச்சம் பழம்" என்று சொல்லக்கூடிய நிலைமையிலே தி.மு.க. அரசினுடைய ஆட்சியிலே போக்குவரத்துக் கழகம் செயல்பட்டது.

நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், மூன்றாவது முறையாக முதலமைச்சர் பதவியை ஏற்று, 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரையிலும், 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையிலும், இன்றைக்கு மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பிறகும், போக்குவரத்துத் துறையில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அம்மா அவர்கள் சென்னைக்குப் பஸ்களை விடுவதற்கு உத்தரவிட்டதற்கும், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே மேலூர் தொகுதியிலே நிறுத்தி வைத்த பல்வேறு வழித்தடங்களிலே பஸ்களை இயக்குவதற்கு உத்தரவிட்டதற்கும், மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

[2012 ஏப்ரல் 4

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் தொகுதியிலிருந்து, சங்கரன்கோவிலை starting point ஆக கொண்டு சென்னைக்குப் புதிய பேருந்து இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய 5 ஆண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு என்று எந்த ஒரு புதிய பேருந்துகளும் வழங்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 473 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு ஆணையிட்டு, நிதியைக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) எந்தெந்த பெரிய நகரங்களிலிருந்து சென்னைக்கு பொது மக்கள் அதிகமாக வருகிறார்களோ அங்கிருந்தெல்லாம் சென்னைக்குப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். இந்த 473 புதிய பேருந்துகள் மட்டுமல்ல ஏற்கெனவே நல்ல நிலையிலேயிருந்த இன்ஜின் அடிச்சட்டங்களைக் கொண்ட பேருந்துகளைப் புதுப்பிக்கின்ற வகையில், 100 புதிய கூண்டுகள் கட்டுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆக, அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், 900 பேருந்துகள் இயக்கப்படுவதில், 573 புதிய பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நிதியைக் கொடுத்து, புதிய கூண்டுகளைக் கட்டி இயக்க உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன்படி, சங்கரன்கோவிலிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவிலிலிருந்து சென்னைக்கு நேரடியாகப் புறப்பட்டுவரும் பேருந்து ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2012 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதைக் கொடுக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றிகளை சங்கரன்கோவில் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

மீன் பதனிடுதல்

***5325—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன்களை குளிர்பதன முறையில் பதப்படுத்தி அவற்றினை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்களிலுள்ள மீன்பிடி நகரங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முன்னோடித் திட்டமாக, சென்னை மற்றும் நாகப்பட்டினத்தில் இப்பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து முன்னோடித் திட்டத்தின் சிறப்பைப் பொறுத்து, பிற கடலோர மாவட்டங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்திலும் மீன் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.